# 21

## உழைப்பின் முக்கியத்துவம்



ஒரு நாள் முஹம்மத் ﷺ அவர்கள் தனது தோழர்களுடன் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது பலசாலியான ஒரு வாலிபன் அவ்வழியால் சென்று கொண்டிருந்தான். அது இறைபாதையில் ஜிஹாத் செய்வதற்காக, வாலிபர்கள் போட்டியிட்டுக் கொண்டிருந்த காலம். திடகாத்திரமான அவ்வாலிபரைக் கண்டதும்,

‘‘அவனுக்கு என்ன கேடு நடந்தது? இவன் தனது வலிமையையும், திறமையையும் போர்க்களத்தில் செலவழிக்க வேண்டாமா?’’ என்று அபூபக்ர் (ரழி) குறைபட்டார்கள். அதைக் கேட்ட நபியவர்கள், ‘‘தனது வயது முதிர்ந்த தாய்-தந்தையருக்காகவோ அல்லது பச்சிளம் குழந்தைகளுக்காகவோ அல்லது இரந்துண்ணும் இழிநிலைக்குத் தன்னைக் கொண்டு வராமலிருப்பதற்காகவோ அவ்விளைஞன் உழைத்துக் கொண்டிருந்தால், அவன் இறைவழியில் போர்க்களத்தில் நிற்பவனுக்கு நிகரானவன்தான்’’ என விளக்கமளித்தார்கள் (தபரானி).

இதுபோன்று உழைப்புக்கு ஊக்கமளித்த பல சம்பவங்கள் நபி ﷺ அவர்களின் வாழ்வில் நிகழ்ந்துள்ளன.

இந்தச் சம்பவம் உழைப்பின் சிறப்பை எடுத்துக் காட்டுவதோடு, அதனை ஜிஹாதுக்கு நிகரானதாகச் சொல்லியிருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். மனிதன் அல்லாஹ்வின்

படைப்புக்களில் மிக மேலானவன். முழுப் பிரபஞ்சமும் அவனுக்காகவே படைக்கப்பட்டுள்ளது. தவிர அவனது வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்வதற்கு வாய்ப்பாக அது வசப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் உழைத்து வாழ வேண்டும் என்பதும், தனது தேவைகளை அதனூடாகவே நிறைவு செய்துகொள்ள வேண்டுமென்பதும் அல்லாஹ்வின் விருப்பமாகும். எனவேதான் துறவியாக வாழ்வதும், யாசகம் கேட்பதும் இஸ்லாத்தில் கண்டிக்கப்பட்டுள்ளன.

அல்குர்ஆன் வசனங்கள் பொருளீட்டலைப் பின்வருமாறு வலியுறுத்திக் காட்டியுள்ளன.

‘‘அவன்தான் உங்களுக்கு பூமியை வசதியாக ஆக்கிவைத்தான். எனவே பல கோணங்களிலும் சென்று அவன் உங்களுக்கு வழங்கியிருப்பதைப் புசிப்பீர்களாக’’ (67:15).

‘‘தொழுகை முடிந்துவிட்டால் பூமியில் பரந்து சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடிக் கொள்ளுங்கள்’’ (62:10).



முதலாவது வசனம் பூமி மனிதனுக்காகவே படைக்கப்பட்டுள்ளது என்றும், அது மனிதனின் பலதரப்பட்ட பொருளீட்டல் முயற்சிகளுக்கு வாய்ப்பாக உள்ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது. இரண்டாவது வசனம், ஆன்மீக விருத்திக்குத் தொழுகை எவ்வளவு அவசியமோ, அவ்வாறே லௌகீக விருத்திக்குப் பொருளீட்டல் அவசியம் என்பதை அழகாகச் சித்தரித்துக் காட்டியுள்ளது. மனிதன் தனது வாழ்வை முன்னெடுத்துச் செல்ல, பொருளாதார வசதிகளைப் பெறுவது தவிர்க்க முடியாததாகும். தொழுகையும் பொருள் தேடலும் மனித வாழ்வில் இடம்பெறும் இருவகை வணக்கங்களாகும். இதனால்தான் உழைப்பு அல்லாஹ்வுக்கு விருப்பமான வழிமுறையாகக் காட்டப்பட்டுள்ளது.

பொருளீட்டலுக்கான வழிமுறைகள் பலதரப்பட்டவை. அது மனிதனின் ஆற்றல், திறமை, அனுபவம் போன்றவைகளுக்கேற்ப வேறுபட்டு அமையும். ஏமாற்றல், வஞ்சித்தல், திருடுதல் போன்றனவன்றி வேறு எந்தத் தொழிலும் இழிதொழிலல்ல. மனிதன் எந்தத் தொழில் செய்தாலும் அது அவனின் சமய பக்தியில் பாதிப்பை ஏற்படுத்தாது. எந்தத் தொழிலைச் செய்தபோதும் இறை ஞாபகத்தோடும், மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்லியாக வேண்டும் என்ற கவனத்தோடும் பொறுப்புணர்வோடும் இருப்பது நேர்மையான உழைப்பாளனாக அமைவதற்குப் போதுமானதாகும்.

அல்லாஹ்வின் அருளைப் பெற்ற நபிமார்கள் பல்வேறு தொழில்களைச் செய்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| நபி ஆதம் (அலை) | - | விவசாயம் |
| நபி நூஹ் (அலை) | - | தச்சுத் தொழில் |
| நபி இத்ரீஸ் (அலை) | - | தையல் தொழில் |
| நபி தாவூத் (அலை) | - | இரும்புத் தொழில் |
| நபி மூஸா (அலை) | - | மந்தை மேய்த்தல் |

இறுதி நபி முஹம்மத் ﷺ அவர்களும் சுய உழைப்பின் மூலமே தமது வாழ்க்கையை நடாத்தியுள்ளார்கள். சிறிது காலம் மக்காவில் 'கரார்த்' என்ற இடத்தில் இடையராக இருந்துள்ளார்கள். சில காலம் கதீஜா (ரழி)யின் பொருட்களைக் கொண்டு சென்று வர்த்தகம் செய்துள்ளார்கள். மதீனாவில் இஸ்லாமிய ஆட்சி உருவானதைத் தொடர்ந்து அதன் தலைவராகப் பணியாற்றியுள்ளார்கள். அவர்களின் ஸஹாபாக்கள் விவசாயம், கைத்தொழில் துறைகளில் ஈடுபாடு காட்டியது போலவே பொதுநிர்வாகம், நலன்துறை, பாதுகாப்பு முதலான சேவைத் துறைகளிலும் பணியாற்றியுள்ளனர். அவர்கள் நீதிபதிகளாக, தளபதிகளாக, ஆசிரியர்களாக, மருத்துவர்களாக, போர் வீரர்களாக, வர்த்தக மேற்பார்வையாளர்களாக எனப் பல்வேறு தொழில்களையும் மேற்கொண்டுள்ளனர்.

ஸஹாபாப் பெண்கள், பெண்களது இயல்புக்கு ஏற்ற தொழில் முயற்சிகளில் பங்கெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

பின்வரும் ஹதீஸ்களை உற்று நோக்கும்போது, உழைப்பு இஸ்லாத்தில் எவ்வளவு தூரம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதைக் கண்டு கொள்ளலாம்.

''சீரான உடலும், பலமும் உள்ளவனுக்கு ஸதகா ஹலாலாக மாட்டாது'' (திர்மிதி).

''உங்களில் ஒருவர் தனது கயிற்றை எடுத்துச் சென்று விறகு சேர்த்து (தொழில் செய்து) வருவதானது மனிதர்கள் கொடுத்தாலும், மறுத்தாலும் அவர்களிடம் சென்று கை நீட்டி யாசகம் செய்வதை விடச் சிறந்ததாகும்'' (புஹாரி).

நல்ல வழியில் உழைத்து வாழ்வோம், நன்மை பெறுவோம்.

**பயிற்சி:**

1. உழைப்பின்போது கவனிக்க வேண்டிய அம்சங்களைப் பட்டியற்படுத்துக.
2. உழைப்பதற்காக நபி ﷺ அவர்கள் ஸஹாபாக்களை எவ்வாறு தூண்டினார்கள்?
3. பின்வரும் நபிமார்களையும் அவர்கள் மேற்கொண்ட தொழில்களையும் சரியான முறையில் இணைக்குக.

| | |
|---|---|
| i) தாவூத் (அலை) | தையல் |
| ii) மூஸா (அலை) | விவசாயம் |
| iii) இத்ரீஸ் (அலை) | தச்சுத் தொழில் |
| iv) நூஹ் (அலை) | இரும்புத் தொழில் |
| v) ஆதம் (அலை) | மந்தை மேய்த்தல் |